# இறைத்தூதன்
## கத்தோலிக்க வார இதழ்


போர் இல்லாத நிலை மட்டுமே அமைதி அல்ல, மாறாக நீதியைச் செயல்படுத்துவதே உண்மையான அமைதி என்பதைத் திருத்தந்தை நினைவூட்டுகிறார். ஆனால் தொழில்நுட்பம் நமது பகுத்தறியும் திறனைக் குறைக்கும் போது, அமைதிக்கே ஆபத்து ஏற்படுகிறது. இருப்பினும், ஆயுதக் களைப்பு மட்டும் போதாது; நாம் நேர்மறையானவற்றை உருவாக்க வேண்டும்.

## “இறைவனுடன் இணையும் இதயத்தின் அமைதியான பயணம்”

“உங்கள் கவலைகளையெல்லாம் அவரிடம் விட்டு விடுங்கள். ஏனென்றால், அவர் உங்கள் மேல் கவலை கொண்டுள்ளார்." – 1 பேதுரு 5:7

வாழ்க்கைப் பயணத்தில் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கட்டத்தில் சோதனைகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்கிறோம். சில நேரங்களில் மனதில் எழும் கவலைகள், பயம் மற்றும் எதிர்காலத்தைப் பற்றிய குழப்பம் நம்மை சோர்வடையச் செய்கின்றன. அத்தகைய நேரங்களில் நமக்கு உறுதுணையாக இருப்பது இறைவனுடனான ஜெப உறவாகும்.

ஜெபம் என்பது இறைவனிடம் வேண்டுதல்களை முன்வைப்பது மட்டுமல்ல. அது நம் இதயத்தை அவரிடம் திறந்து வைக்கும் அன்பின் உரையாடல். மகிழ்ச்சியான நேரங்களிலும் துயரமான தருணங்களிலும் இறைவனை நாடும்போது, அவர் நம்முடன் இருக்கிறார் என்ற நம்பிக்கை நம் உள்ளத்தில் வேரூன்றுகிறது.

இயேசு கிறிஸ்து தமது வாழ்வின் ஒவ்வொரு முக்கிய தருணத்திலும் ஜெபத்திற்கு முதன்மை கொடுத்தார். மக்களுக்குப் போதித்த பிறகும், சிலுவைப் பாடுகளுக்கு முன்பும், அவர் தந்தையுடன் ஜெபத்தில் ஒன்றிப்போனார். இந்த எடுத்துக்காட்டு, எந்தச் சூழலிலும் ஜெபத்தை விட்டு விலகக் கூடாது என்பதை நமக்குக் கற்றுத்தருகிறது.

பலமுறை நாம் ஜெபிக்கும்போது எதிர்பார்த்த பதில் உடனடியாக கிடைக்காமல் இருக்கலாம். ஆனால் இறைவன் செயல்படாதவர் அல்ல. அவரது நேரமும் திட்டமும் நமக்கான நன்மையையே நோக்கமாகக் கொண்டவை. ஜெபம் சூழ்நிலையை மாற்றுவதற்கு முன், அதை எதிர்கொள்ளும் நம் மனதை மாற்றுகிறது. அதுவே உண்மையான ஆன்மீக வலிமையாகும்.

குடும்பமாக இணைந்து ஜெபிப்பது மிகவும் அவசியமானது. குடும்ப ஜெபம் அன்பையும் மன்னிப்பையும் ஒற்றுமையையும் வளர்க்கிறது. அதேபோல், தினமும் சில நிமிடங்கள் தனிப்பட்ட ஜெபத்திற்கும், இறைவார்த்தை வாசிப்பிற்கும் ஒதுக்குவது, இறைவனுடனான நம் உறவை ஆழமாக்குகிறது.

உலகம் தரும் அமைதி தற்காலிகமானது. ஆனால் கிறிஸ்து தரும் அமைதி நிலையானது. எனவே, நம் அன்றாட வாழ்வில் ஜெபத்திற்கு முக்கிய இடம் கொடுப்போம். இறைவனை நம்பி வாழும் ஒவ்வொரு இதயமும் அவரது சமாதானத்தாலும் அன்பாலும் நிரம்பி, இறைவனின் அருள் என்றும் அனைவர்மீதும் பொழிய இறைவன் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஜெனிஃபர் ஜோன்

## 60-வது உலக அமைதி நாள் கருப்பொருள்



ஜனவரி 1, 2027 அன்று 60-வது உலக அமைதி நாள் கொண்டாடப்படுகிறது. இக்கொண்டாட்டத்திற்காக, திருத்தந்தை 14-ஆம் லியோ "தொழில்நுட்பத்தை ஆயுதக் களைப்பு செய்தல், அமைதிக்கு பணியாற்றுதல்: தடுப்புப் பொறுப்பாக அரசியல்" (Disarming Technology, Serving Peace: Politics as Preventive Responsibility) என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளதாக ஒருங்கிணைந்த மனித வளர்ச்சிப் பணித் துறை அறிவித்துள்ளது.

அரசியல் துறையில் பணியாற்ற அழைக்கப்பட்டவர்களின் "நன்னெறிச் சார்ந்த பொறுப்பை" சுட்டிக்காட்டத் திருத்தந்தை விரும்புவதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தொழில்நுட்பத்தை அமைதியான ("ஆயுதக் களைப்பு") வழிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதன் மூலம், ஒவ்வொரு மனிதனின் கண்ணியத்தையும் உயர்த்திப் பிடித்து, அமைதியை வளர்க்க மனிதகுலத்திற்குத் திருத்தந்தை ஊக்கமளிக்கிறார்.

தமது 'மேக்னிஃபிகா ஹுமானிட்டாஸ்' (Magnifica humanitas - எண்: 198) என்ற சுற்றறிக்கையைக் குறிப்பிட்டு, "போரை தர்ம நியாயமானதாக மாற்றக்கூடிய எந்தவொரு கணினி வழிமுறையும் (algorithm) கிடையாது" என்று திருத்தந்தை சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன், போர்க்கால முடிவுகளை எடுக்க செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்துவதில் உள்ள ஆபத்துக்களை எச்சரிக்கும் அவர், அகில உலக சமூகத்திற்கும் ஓர் அன்பான வேண்டுகோளை விடுக்கிறார்.

"மனித உயிர்களும் நாடுகளுக்கு இடையேயான அமைதியான வாழ்வும் ஆபத்தில் இருக்கும் சூழல்களில், மனிதர்களின் பொறுப்பையும் மனிதநேயக் கோட்பாடுகளையும் பாதுகாக்கும் வகையிலான கூட்டு ஒப்பந்தங்களை உருவாக்க வேண்டும்" என்று அவர் அழைப்பு விடுக்கிறார்.

### சுற்றறிக்கையை அறிமுகப்படுத்துதல்

திருஅவையின் வரலாற்றிலேயே முதன்முறையாக வெளியிடப்பட்ட இந்த ஆவணத்தை, மே 25 அன்று புதிய அவையில் அறிமுகப்படுத்திப் பேசிய திருத்தந்தை, இந்த 200 பக்க ஆவணம் புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு குறித்து திருப்பீடம் செய்த ஆழமான சிந்தனையின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார். இன்று இந்தத் தொழில்நுட்பங்கள் நமது வாழ்வின் பல பகுதிகளைத் தொடுவதோடு, முடிவுகளைத் தீர்மானிப்பதாகவும், போரிடும் முறையை முற்றிலும் மாற்றி அமைப்பதாகவும் அவர் கூறினார்.

### "செயற்கை நுண்ணறிவின் ஆயுதக் களைப்பு"

இவை அனைத்திலிருந்தும் உருவான ஒரு கருத்தை திருத்தந்தை 'அதிர்ச்சியளிப்பதாக' விவரித்தார். அதுவே இந்தச் சுற்றறிக்கையின் மையக்கருத்தாக அமைந்தது: "செயற்கை நுண்ணறிவு ஆயுதக் களைப்பு செய்யப்பட வேண்டும்."

"இந்த வார்த்தை மிகவும் தீவிரமானது என்பதை நான் அறிவேன்," என்று ஒப்புக்கொண்ட அவர், "ஆனால் மக்களின் கவனத்தை ஈர்க்கவும், மனசாட்சியை விழிப்படையச் செய்யவும், மனிதகுலத்திற்கு சரியான பாதையைக் காட்டவும் கூடிய சொற்கள் இந்த நேரத்திற்குத் தேவை என்பதால், இது வேண்டுமென்றே தேர்ந்தெடுக்கப்பட்டது" என்றார்.

### தொழில்நுட்பம் நமது பகுத்தறியும் திறனைக் குறைக்கக் கூடாது

அணு ஆயுதக் களைப்பை "அமைதிக்கும் மனிதக் குடும்பத்தின் கண்ணியத்திற்குமான சேவை" எனக் கருதி திருஅவை பலகாலமாக அதில் உறுதியோடு செயல்பட்டு வருவதைத் திருத்தந்தை தெரிவித்தார். அதே உணர்வில், "இப்போது செயற்கை நுண்ணறிவும் ஆயுதக் களைப்பு செய்யப்பட வேண்டும்." ஏனெனில், "அணு ஆற்றலைப் போலவே, இதுவும் அனைவரின் நலனுக்கும் பொது நன்மைக்கும் மட்டுமே பயன்பட வேண்டும்." மேலும், "தொழில்நுட்பம் குறித்த முடிவுகள் ஒருபோதும் மனசாட்சியிலிருந்தும் பொறுப்பிலிருந்தும் பிரிக்கப்படக் கூடாது" என்றார்.

போர் இல்லாத நிலை மட்டுமே அமைதி அல்ல, மாறாக நீதியைச் செயல்படுத்துவதே உண்மையான அமைதி என்பதைத் திருத்தந்தை நினைவூட்டுகிறார். ஆனால் தொழில்நுட்பம் நமது பகுத்தறியும் திறனைக் குறைக்கும் போது, அமைதிக்கே ஆபத்து ஏற்படுகிறது. இருப்பினும், ஆயுதக் களைப்பு மட்டும் போதாது; நாம் நேர்மறையானவற்றை உருவாக்க வேண்டும்.

### செயற்கை நுண்ணறிவை பொது நன்மைக்கு எவ்வாறு பயன்படுத்துவது?

இங்கே திருத்தந்தை பெரு நாட்டில் தாம் மறைப்பணி செய்த காலத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் அனுபவத்தை நினைவுகூர்ந்தார்: "அழிந்தவற்றை மீண்டும் உருவாக்குவது என்பது இடிந்ததை மாற்றுவது மட்டுமல்ல; மாறாக, உறவுகளைப் புதுப்பிப்பதும், நம்பிக்கையை மீட்டெடுப்பதும், எதிர்காலத்திற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவது ஆகும் என்பதை நான் அங்கு கற்றுக்கொண்டேன். அதுமட்டுமன்றி, யாருமே தனியாக எதையும் மறுசீரமைப்பு செய்வதில்லை."

இத்தகைய முழுமையான பார்வையால் மட்டுமே செயற்கை நுண்ணறிவை பொது நன்மைக்கு திருப்ப முடியும். தொழில்நுட்ப அமைப்புகளை உருவாக்குபவர்கள், அதனால் பாதிக்கப்படுபவர்கள், பணக்கார மற்றும் ஏழை நாடுகள், நிறுவனங்கள், தனிநபர்கள், அதிகார மையங்கள் என அனைவரும் இணைந்து செயல்பட்டால் மட்டுமே - ஒரு சில சலுகை பெற்றவர்களுக்கு மட்டுமல்லாமல், முழு மனிதக் குடும்பத்திற்குமான எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தமிழாக்கம் ஹெரால்டு

## கொலம்பியா நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காக திருத்தந்தை செபம்



ஆகஸ்ட் 10 அன்று கொலம்பியாவைத் தாக்கிய சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 150-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்; நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இத்துயரச் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்காகத் தாம் மிகவும் வருந்துவதாகத் தெரிவித்துள்ள திருத்தந்தை, இறந்தோரின் ஆன்ம அமைதிக்காகவும், பாதிக்கப்பட்டவர்கள் விரைவாகக் குணமடையவும் செபிப்பதாக உறுதியளித்துள்ளார்.

கொலம்பிய ஆயர்கள் பேரவையின் தலைவரும், கார்த்தாகேனா (Cartagena) பேராயருமான பிரான்சிஸ்கோ சேவியர் முனேரா கொர்ரெயா அவர்களிடம், வத்திக்கான் வெளியுறவுச் செயலர் கர்தினால் பியெத்ரோ பரோலின் வழியே அனுப்பிய தந்திச் செய்தியில் திருத்தந்தை தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தென்மேற்குப் பகுதியைத் தாக்கிய இந்த நிலநடுக்கம், பேரழிவை ஏற்படுத்தியதோடு பல ஆலயங்களுக்கும் கடுமையான சேதத்தை விளைவித்துள்ளது.

அனுப்பிய செய்தியில், "இந்த மிகக் கடுமையான துயர வேளையில், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வாடும் குடும்பங்களுக்கு என் இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று திருத்தந்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உயிர்காக்கும் மீட்புப் பணிகளிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதிலும் "தாராள மனதோடு அர்ப்பணிப்புடன்" செயலாற்றி வரும் அனைவருக்கும் தனது நன்றியையும், ஆன்மீக ஆதரவையும் திருத்தந்தைத் தெரிவித்துக் கொண்டார்.

நிறைவாக, அன்னை மரியாவின் பரிந்துரையால், "அன்பிற்குரிய கொலம்பிய மக்களுக்கு ஆண்டவர் ஆன்மீகப் பெலனையும் கிறிஸ்தவ நம்பிக்கையையும் பொழிய வேண்டும்" என்று செபித்து, தனது திருத்தூதுரை ஆசீரையும் வழங்கினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# உயிர்த்த கிறிஸ்து தேவாலயத்தில் மறைக்கல்வி ஞாயிறு விழா!

பினாங்கு: கடந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி, பினாங்கில் உள்ள உயிர்த்த கிறிஸ்து கத்தோலிக்கப் பங்கில் (Risen Christ Catholic Church) 'மறைக்கல்வி ஞாயிறு' பன்மொழித் திருப்பலியுடன் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. வெவ்வேறு மொழிச் சமூகங்களைச் சேர்ந்த பங்கு மக்கள் ஒன்று கூடி இந்த மறைக்கல்வி விழாவில் பங்கேற்றனர்.

நம் வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் மறைக்கல்வி எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்தும் வகையில் அமைந்த இத்திருப்பலியில் மறைக்கல்வி சிறுவர்கள், அர்ப்பணிப்புள்ள மறைக்கல்வி ஆசிரியர்கள் (Catechists) மற்றும் 'கத்தோலிக்க புதுமுக ஆயத்தப் பயிற்சியில்' (RCIA) பயணிக்கும் பெரியோர்கள் அனைவரும் ஒன்றாகக் கலந்துகொண்டனர்.

இத்திருப்பலியை மறைக்கல்விச் சிறுவர்களே முன்னெடுத்து நடத்தினார்கள். வருகையாளர்களை வரவேற்பது, பாடற்குழு, வாசகங்கள் வாசிப்பது, கருத்துரைகள் வழங்குவது மற்றும் காணிக்கை வழங்குவது என அனைத்துப் பணிகளையும் அவர்களே சிறப்பாகச் செய்தனர். குழந்தைகள் வழிபாட்டில் இவ்வளவு ஆர்வத்தோடு பங்கேற்றது அவர்களின் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மிகுந்த பெருமிதத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தது. விசுவாசம் என்பது வகுப்பறையோடு முடிந்துவிடுவதல்ல, பிறருக்குச் சேவை செய்வதன் மூலமே அது முழுமை பெறுகிறது என்பதை இந்நிகழ்வு நமக்கு நினைவூட்டியது.

விழாவின் முக்கிய நிகழ்வாக, பங்குத்தந்தை துறவரர் கிரிஸ்பஸ் மோசினோ (Friar Crispus Mosinoh, OFM) அவர்களால் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான பணிப்பொறுப்பு அளித்தல் (Commissioning of Catechists) நடைபெற்றது. இதன் மூலம், பிள்ளைகளுக்கும் பெரியவர்களுக்கும் ஆன்மீக வழிகாட்டி, அர்ப்பணிப்போடும் அன்போடும் திருஅவைக்குச் சேவை செய்யப் போவதாக மறைக்கல்வி ஆசிரியர்கள் பகிரங்கமாக உறுதியேற்றுக்கொண்டனர்.

### குடும்பமே விசுவாசத்தின் முதல் பள்ளி

அதன்பின்னர், பிள்ளைகளும் அவர்களின் பெற்றோர்களும் தங்கள் விசுவாசப் பயணத்தில் தங்களை மீண்டும் அர்ப்பணித்துக் கொள்ள அழைக்கப்பட்டனர். விசுவாசப் பயிற்சி என்பது வீட்டிலிருந்தே தொடங்குகிறது என்பதை இது நமக்கு உணர்த்தியது. பிள்ளைகளுக்கு விசுவாசத்தைக் கற்றுக்கொடுக்கும் முதல் ஆசிரியர்கள் பெற்றோர்களே! அவர்களுக்கு உறுதுணையாக மறைக்கல்வி ஆசிரியர்களும் பங்குச் சமூகமும் இணைந்து பயணிக்கின்றனர்.

திருப்பலிக்குப் பிறகு, மறைக்கல்வி அமைப்பின் சார்பில் பிள்ளைகளுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. அனைவரும் ஒன்றாக அமர்ந்து பேசி, ஒரு பங்குத் தாயின் பிள்ளைகளாக இணைந்து உணவருந்தி மகிழ இது நல்லதொரு வாய்ப்பாக அமைந்தது.

புனிதமேரி

# இறைவார்த்தை & மறைக்கல்வி ஞாயிறுக் கொண்டாட்டம்



காஜங் திருகுடும்ப தேவாலயத்தில் "இறை வார்த்தை & மறைக்கல்வி ஞாயிறு" விழா ஆகஸ்ட் 2ஆம் தேதி சிறப்பாக நடைபெற்றது. விலிலிய ஆராதனையோடு 'உன் வார்த்தை வாழ்வுக்கு ஒளியாகட்டும்' என்ற பாடலுடன் அன்றைய நிகழ்வு காலை 9.30 மணிக்கு தொடங்கியது. இறை ஆசீரோடு திருவிவிலியப் பணிக் குழு தலைவர் எம். டெனியலின் வரவேற்பு உரையும் பங்கு துணை அருள்பணியாளர் போனா வெஞ்சர் இராயப்பனின் சிறப்பு உரையும் ஆற்றினர். முதல் தடவையாக இரண்டு பணிக் குழுகள் (திருவிவிலியப் பணிக் குழு & மறைக்கல்வி பணிக்குழு) சேர்ந்து இவ்விழாவை சிறப்பாக நடத்தினோம். பேச்சுப்போட்டியில் 'மாற்றத்தின் நாயகன் என் இயேசு' என்ற தலைப்பில் மாணவர்கள் சிறப்பாக பேசினர், விவிலியம் மற்றும் திருஅவை மாந்தர் வேடப் போட்டியில் கலந்து கொண்ட பிள்ளைகள் நாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வமையில் தங்களுடைய திறமையை வெளிப்படுத்தினர். ஐந்து இறைவசனங்களை மனனம் செய்யும் போட்டியில் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்டு இறைவார்த்தைகளின் மீது அவர்களின் ஆழமான புரிதலையயும் ஈடுபட்டையும் காட்டினர். கட்டுரை போட்டியும் வர்ணம் தீட்டும் போட்டியும் நடத்தப்பட்டன. இயேசுவின் போதனை இக்காலத்துக்கு பொருந்தும் பொருந்தாது என்ற தலைப்பில் பட்டிமன்றம் இரு அணிகளுக்கிடையே சிறப்பாக அமைந்தது, இறுதியாக விவிலியப் புதிர் போட்டி புதிய முறையில் நடத்தப்பட்டது மிகவும் சிறப்பாகவும் இருந்தது. இந்த விழாவில் 150க்கும் அதிகமானோர் கலந்து சிறப்பித்தனர்.



இறை ஆசிரோடு மதிய உணவுக்குப் பின் பிற்பகல் 1.30 மணிக்கு நிகழ்ச்சி ஒரு நிறைவை அடைந்தது. இறைவார்த்தை ஒவ்வொரு உள்ளத்தில் ஆழப்படுத்தி மாற்றத்தை கொண்டு வர வேண்டும் என்பது இவ்விழாவின் நோக்கம்.

கே.மதலின்

# ஒருமைப்பாட்டு பயிற்சி

## அன்பின் பிணைப்பில் ஓர் உன்னதப் பயணம்!

கடந்த 20 ஜூன் 2026 சனிக்கிழமையன்று, பெர்மாதாங் திங்கி மரியாளின் திருநாம தேவாலயப் பங்கு மேய்ப்புப்பணிப் பேரவையின் (Parish Pastoral Council) ஏற்பாட்டில், பினாங்கு அங்சானா தெலுக் பகாங், தங்கும் விடுதியில் ஓர் உன்னதமான ஒருமைப்பாட்டுப் பயிற்சி நடைபெற்றது. எங்களின் அன்பிற்குரிய பங்கு குருவானவர் அருட்பணி லூயிஸ் லோய் அவர்களின் பெருமுயற்சியில் உருவான இப்பயிற்சியை, 'டைனமிக் ரிசோர்ஸ்' (Dynamic Resource Training & Consultancy PLT) மையத்தினர் மிகச் சிறப்பாக வழிநடத்தினர்.

தமிழ், ஆங்கிலம், சபாஹான் எனப் பன்மொழி பேசும் குழுவினரின் அனைத்துத் தலைவர்களுக்கும், பணிக்குழுப் பொறுப்பாளர்களுக்கும் இடையே ஒரு புதிய பாலமாக இப்பயிற்சி அமைந்தது. மொழிகளாலும் கலாச்சாரங்களாலும் நாம் வேறுபட்டிருந்தாலும், கிறிஸ்துவின் நிழலில் நாம் அனைவரும் 'ஒரே உள்ளம், ஒரே சரீரம்' என்பதை இந்தத் தருணம் எங்களுக்கு உணர்த்தியது. திருஅவையின் பணி என்பது தனிமனிதக் கடமையல்ல, மாறாக அனைவரும் இணைந்து பொறுப்புகளைப் பகிர்ந்து செயலாற்றும் ஒரு கூட்டுப் பணி என்பதைச் சுவாரசியமான விளையாட்டுகள் மூலம் அழகாகக் கற்றுக் கொண்டோம்.

சவாலான விளையாட்டுகள் பல தடைகளை ஏற்படுத்திய போதும், ஒருமனப்பட்ட சிந்தனையோடு கைகோர்த்து நின்றதால் எங்களால் வெற்றிகரமாகச் சவால்களைக் கடக்க முடிந்தது. ஒரு குழுவின் தலைவரும் அதன் அங்கத்தினர்களும் ஒருவருக்கொருவர் செவிமடுத்து, ஆலோசனைகளைப் பரிமாறிக்கொள்ளும்போது எத்தகைய உயரத்தையும் எட்ட முடியும் என்ற நம்பிக்கையை இப்பயிற்சி எங்களுக்குள் விதைத்தது.

"நல்ல ஆயன் நானே! என் ஆடுகள் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றன" (யோவான் 10:11) என்ற இறைவார்த்தைக்கு இணங்க, நம்மை வழிநடத்தும் தலைவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்றி நடந்தால், வருங்காலத்திற்கான மிகச்சிறந்த தலைவர்களை உருவாக்க முடியும் என்ற பேருண்மையை இந்த நன்னாள் எங்களுக்குப் புகட்டியது.

அருட்பணி லூயிஸ் லோவ் அவர்களின் வழிகாட்டுதலோடு, தூய திருப்பலியுடன் இப்பயிற்சி இனிதே நிறைவுற்றது. எங்களை வழிநடத்திய 'டைனமிக் ரிசோர்ஸ்' மையத்திற்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கிறோம்.

இறைவார்த்தையின்படி நாம் அனைவரும் ஒருமனப்பட்டு, அன்பிலும் ஊழியத்திலும் இணைந்து வளர்ந்து, நம் திருச்சபையை அடுத்த நிலைக்குக் கொண்டு செல்வோம்!

ஷீலா, மரியாளின் திருநாம தேவாலயம் பெர்மாத்தாங் திங்கி




# பொதுக்காலம் ஆண்டின் 21 ஆம் ஞாயிறு – 23-08-2026

**எசாயா 22: 19-23; திபா 138: 1-2a. 2bc-3. 6,8bc**
**உரோமையர் 11: 33-36; மத்தேயு 16: 13-20**

## உன்மீது என் திருச்சபையைக் கட்டுவேன்

அன்பு சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் சமாதானம். இன்றைய ஞாயிறின் வாசகங்கள் நமக்கு விண்ணகத் தந்தையின் அதிகாரத்தையும், அவரின் தெய்வீக அழைப்பையும் மற்றும் தாம் தேர்ந்துகொண்ட மக்கள் மீது தலைமைத்துவத்தை வழங்குவதையும் பார்க்கிறோம்.

பெருமை கொண்ட ஷெப்னாவை அரச பதவியிலிருந்து நீக்கிவிட்டு, அவனுக்குப் பதிலாக எலியாக்கீமை நியமிக்கிறார் என்று எசாயா புத்தகத்தில் வாசிக்கிறோம். அவன் திறப்பதை ஒருவரும் மூடமாட்டார்கள், அவன் மூடுவதை ஒருவரும் திறக்கமாட்டார்கள். இந்த இறைவார்த்தைகள் இன்றைய நற்செய்தியில் மீண்டும் இயேசுவின் வழியாக அறிவிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இது கடவுள் அனைத்து அதிகாரத்தையும் தன்னகத்தேக் கொண்டவர் என்ற கருப்பொருளைக் கொண்டுள்ளது.

இன்றைய திருப்பாடலில் கடவுளுடைய மாறாத இரக்கம், உண்மை மற்றும் நம்பிக்கைக்காக அவருக்கு முழு உள்ளத்துடன் நன்றி கூறும் திருப்பாடல் ஆசிரியரை நாம் காண்கிறோம். கடவுளின் கைவண்மை எப்போதும் அவருடனே இருக்கவேண்டும் என்று மன்றாடுகிறார். நாம் எப்போதும் இறைவனின்மீது நன்றியுணர்வும் அன்பும் கொண்டிருக்கவேண்டும் என்று நமக்குக் காட்டுகிறார்.

இரண்டாம் வாசகத்தில் புனித பவுல் கடவுளின் ஞானத்தையும், அறிவு மற்றும் ஆராய முடியாத அவரின் தீர்ப்புகளின் ஆழத்தையும் கண்டு வியக்கிறார். அனைத்தும் அவரிடமிருந்தே வருகின்றன; அவருடைய வல்லமையாலே நிறைந்திருக்கின்றன; அனைத்தும் அவருடைய மாட்சிக்காகவே இருக்கின்றன என்பதை நமக்கு வலியுறுத்துகின்றார்.

இவ்வாறு இன்றைய வாசகங்கள் அனைத்திலும் ஆண்டவரின் அதிகாரத்தையும், வல்லமையையும் கண்ட நமக்கு, நற்செய்தியில் இயேசு தம்மை யாரென்று மக்கள் கூறுகிறார்கள் என்று அறியவிரும்பி சீடர்களிடம் கேட்கிறார். அதில் பேதுரு அறிக்கையிட்ட பதிலால், இயேசு அவருக்கு ஆசீரை முழுமையாகத் தருகிறார். முதல் வாசகத்தில் கேட்ட அந்த வார்த்தைகளைப் போலவே, திறக்கவும், பூட்டவும், கட்டவும், கட்டவிழ்க்கவும் அதிகாரத்தையும் தலைமைப் பொறுப்பையும் பேதுருவிடம் தருகிறார். இதுதான் நம்முடைய கத்தோலிக்க விசுவாசத்தின் முதன்மையானதும் போற்றத்தக்கதுமான அடித்தளம்.

இன்றைய நற்செய்தியையும், அடுத்த வாரத்தின் நற்செய்தியையும் ஒரேபகுதிகளாக வாசிப்பது மிகவும் முக்கியம். இன்று பேதுருவை பாறை எனக்குறிப்பிடும் இயேசு ,பேதுரு இயேசுவின் பாடுகளுக்கு எதிர்வினையாகப் பேசியபோது அவரை சாத்தான் என்று கடிந்துகொள்ளவும் செய்கிறார்.இதை நாம் அடுத்த வார ஞாயிறு வாசகத்தில் கேட்போம்.

இன்றைய நற்செய்தியில் இயேசு முதன்முறையாக திருச்சபை (திருஅவை) என்னும் வார்த்தையைப் பயன்படுத்தியதில் இருந்து, நம்முடைய கத்தோலிக்க திருஅவை, மனிதரால் உண்டாக்கப்பட்டதல்ல மாறாக அதனைத் தோற்றுவித்தவர் இயேசுவே என்று நாம் அறிந்துள்ளோம். இதனால் பிற சபையினரின் மத்தியில் நாம் எப்போதும் கூனிகுறுகி நிற்காமல், கத்தோலிக்கத்தைப் பின்பற்றுவதில் உறுதியாகவும், அதே வேளையில் கிறிஸ்துவின் போதனைகளை உண்மையாகப் பின்பற்றுவதிலும், கடவுளின் அன்பு, பிறரன்பில் உண்மை சீடர்களாக வாழவும் முன்வருவோம். இயேசு கிறிஸ்து ஆண்டவர்; இந்த நம்பிக்கையில் நமது திருஅவை வேரூன்றியுள்ளது.

ஜோஸ்பின் போஸ்கோ, சிரம்பான்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:
மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015